DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.197/2024

Deposition of Witness : LW5/PW7

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தர் | Taluk | |
| Father 's Name | சுப்ரமணியன் | Village | |
| Age | 35 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **10.03.2026** | | | |

( Accused 1, 2 and 3 present)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பண்ருட்டி, வல்லத்தில் வசித்து கட்டுமான நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா–5 செல்வம் என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என் கையொப்பம் முதலாவதாக உள்ளது. இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் மேற்சொன்ன செல்வம் என்பவருடையது. சுமார் 3 வருடங்களுக்கு முன்பு, ஒருநாள் (தேதி, மாதம் தற்போது நியாபகமில்லை) பகல் 3.00லிருந்த 4.00 மணியளவில், எனது சொந்த வேலையாக முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையம் சென்றபோது, அங்கிருந்த போலிசார் என்னிடம் எழுதாத ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள். எதற்கு என்று எனக்கு தெரியாது. அந்த கையொப்பம் தான் மேற்படி முதலாவது கையொப்பம் ஆகும். இதைத்தவிர இவ்வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணம் சம்மந்தமாகவும் வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

1. ஆஜர் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். என் பெயரில், சொந்தமாக வீடு, நிலம் உள்ளது. எனக்கு போதிய உலகறிவு உள்ளது என்றால் சரிதான். இவ்வாறு இருக்கையில், யாரேனும் என்னிடம் ஏதேனும் ஆவணத்தில் கையொப்பம் கேட்டார் நான் படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். யாரேனும் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் கேட்டால், எனது பெயரில் மேற்சொன்னதுபோல் சொந்தமாக வீடு, நிலம் இருப்பதாலும், எனக்கு போதிய உலகறிவு இருப்பதாலும, எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் போடமாட்டேன் என்றால் சரிதான். மேற்படி முத்தாண்டிக்குப்ப காவல் நிலைய உதவி ஆய்வாளர் கடந்த 08.09.2021 அன்று, மாலை 17.00 மணியளவில், இவ்வழக்கு சம்பவ இடத்தை என் முன்பும், செல்வம் முன்பும் பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து தயார் செய்த பார்வை மகசரில் தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். நான் எனது முதல் விசாரணையில்,

எழுதாத வெள்ளைத்தாளில் முத்தாண்டிக்குப்ப காவல் நிலைய போலிசார் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கியதாக சொன்னது, என்னவென்றால் நான், எனது சொந்த வேலையாக சென்றபோது, அப்போது மேற்சொன்ன போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள். அதில் தான் மேற்படி கையொப்பம் செய்ததாக சொன்னேன். ஆனால், மேற்படி மேற்சொன்ன 08.09.2021 அன்று மாலை 17.00 மணியளவில், மேற்சொல்வதுபோல், மேற்சொன்ன காவல் நிலைய உதவி ஆய்வாளர் என் முன்பும், செல்வம் முன்பும் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, தயார் செய்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்பட்ட பார்வை மகசரை நான் மீண்டும் நன்றாக பார்த்த பின்னர், மேற்படி அம்சம் நியாபகம் வந்தது. எனது முதல் விசாரணையின்போது, இதே பார்வை மகசரை காட்டியபோது, நான் வெறும் கையொப்பத்தை மட்டும் பார்த்ததால், வெள்ளை பேப்பரில் செய்த கையொப்பம் என்று சொல்லிவிட்டேன். தற்போது பார்வை மகசரை முழுமையாக நான் படித்துப் பார்த்த பின்னர் தான் மேற்சொன்னவாறு உதவி ஆய்வாளர் எங்கள் இருவர் முன்பும், சம்பவ இடத்தை படம் வரைந்து, தயார் செய்த பார்வை மகசரில், நாங்கள் இருவரும் செய்த சாட்சி கையொப்பம் என்று தெரிகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

நான் கையொப்பமிட்டதாக மேற்கண்ட எனது முதல் விசாரணையில் கூறியுள்ளது, நான் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் வைத்து, வெள்ளைத்தாளில் இட்ட கையொப்பமாகும். என்னை போலிசார் இவ்வழக்கில் தயார் செய்யப்பட்ட வரைபடம் சம்மந்தமாக விசாரணை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.